இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 29.12.2025

# போற்றப்படும் கட்டடக் கலை!

**திராவிட முன்னேற்றக் கழக அரசின் கலைத் தொண்டுக்கு எத்தனையோ உதாரணங்கள் உண்டு. தலைநகர் சென்னையில் வள்ளுவர் கோட்டம், குமரி முனையில் 133 அடியில் திருவள்ளுவருக்குச் சிலை, பூம்புகார் கோட்டம் என முத்தமிழறிஞர் கலைஞர் தம் ஆட்சியில் எத்தனையோ கலைப் படைப்புகளை உருவாக்கினார்.**

அந்த வரிசையில் இன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும் ஏராளமான கலைப் படைப்புகளை உருவாக்கி வருகிறார்.

**சென்னை கடற்கரையில் கலைஞர் உலகம், வள்ளுவர் கோட்டம் புதுப்பிப்பு, குமரி வள்ளுவர் சிலையில் கண்ணாடிப் பாலம், மதுரைக்கு அருகில் கீழடி அருங்காட்சியகம், திருநெல்வேலியில் பொருநை அருங்காட்சியகம், மதுரையில் ஜல்லிக்கட்டு அரங்கம், மதுரையில் மாபெரும் கலைஞர் நூலகம் ஆகியவை இன்றைய முதலமைச்சர் அவர்களின் கலை உள்ளத்துக்கு சாட்சியாக அமைந்துள்ளன.**

கீழடி அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்கள் உலகத் தமிழர்கள் பொதுமக்கள் கண்டு களிக்கும் வகையில் இரண்டு ஏக்கர் நிலப் பரப்பில் 31,000 சதுர அடி பரப்பளவில் 18 கோடியே 43 லட்சம் ரூபாய் செலவில் கீழடி அருங்காட்சியகம் அமைக்கப்பட்டுள்ளது. இதுவரைக்கும் 12 லட்சத்து 50 ஆயிரம் பேர் உலகெங்கிலும் இருந்து வந்து பார்த்துள்ளார்கள்.

திருநெல்வேலியில் 55,000 சதுர அடியில் பாரம்பரிய வடிவமைப்போடும், அதிநவீன தொழில்நுட்பங்களோடும் பொருநை அருங்காட்சியம் உருவாக்கப்பட்டு இருக்கிறது. பொருநை ஆற்றங்கரை அகழாய்வுகளில் கிடைத்த அரிய தொல்பொருட்கள் இங்கு அழகுற காட்சிப்படுத்தப் பட்டிருக்கிறது.

ஆசியாவிலேயே மாடு பிடிவிளையாட்டுக்கான முதல் அரங்கமாக மதுரையில் ஜல்லிக்கட்டு அரங்கம் கம்பீரமாக நிற்கிறது. 66.80 ஏக்கர் பரப்பளவில் உள்ள இந்த இடத்தில் 16 ஏக்கரில் அரங்க வளாகம் அமைக்கப்பட்டுள்ளது. ஒரே நேரத்தில் 4,500பேர்உள்ளே அமர்ந்து பார்க்கலாம். 62.77 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது.

சென்னை கதீட்ரல் சாலையில் செங்காந்தள் பூங்காவுக்கு அருகில் உள்ள 6.09 ஏக்கர் நிலத்தில் 46 கோடியில் கலைஞர் நூற்றாண்டு பூங்கா அமைக்கப்பட்டுள்ளது. வைக்கத்தில் 8 கோடி மதிப்பீட்டில் தந்தை பெரியார் நினைவகத்தை எழுப்பினார் முதலமைச்சர்.

தமிழர்களின் பெருமையை உலகிற்கு எடுத்துரைக்கும் கீழடி மற்றும் பொருநை அருங்காட்சியகங்களை தொடர்ந்து கங்கைகொண்ட சோழ புரத்தில் புதிய அருங்காட்சியகம் 10 ஏக்கர் பரப்பில் 22 கோடி மதிப்பீட்டில் உருவாகிக் கொண்டிருக்கிறது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். தஞ்சையில் உள்ள மாமன்னர் இராசராச சோழன் மணிமண்டபம் மேம்படுத்தி பொலிவூட்டப்படும் என்பதையும் அறிவித்தார்கள்.

இதன் தொடர்ச்சியாக வரலாற்றுச் சிறப்புமிக்க சென்னை விக்டோரியா அரங்கம் அதன் பழமை மாறாமல் மீண்டும் கட்டமைக்கப்பட்டு உள்ளது.

விக்டோரியா பொது அரங்கம், சென்னையில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க கட்டடங்களில் ஒன்று. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இங்கிலாந்தின் விக்டோரியா ராணி ஆட்சியின் பொன் விழாவை நினைவு கூறும் வகையிலும் அமைக்கப்பட்டது. ராபர்ட் சி சோல்ம் என்பவரால் இந்தோ சாரசெனிக் கட்டடக்கலையில் 1887-ஆம் ஆண்டு வடிவமைக்கப்பட்டு, நம் பெருமாள் என்பவரால் இந்த அரங்கம் கட்டப்பட்டது. கலை அரங்கமாக, அரசியல் அரங்கமாகச் செயல்பட்ட இடம் இது. தமிழ் நாடகங்கள், இசை அரங்கேற்றங்கள் நடந்துள்ளன. இந்திய விடுதலைப் போராட்ட காலத்தில் பல்வேறு தலைவர்கள் உரையாற்றிய இடம் இது.

நீதிக்கட்சி காலத்து செயல்பாடுகளுக்கு இது அடித்தளமாக அமைந்தது. நீதிக்கட்சியின் தொடக்கவிழா இங்கு தான் நடந்தது. நீதிக்கட்சித் தலைவரான டி.எம்.நாயர் தனது முக்கியான சில உரைகளை இங்கு ஆற்றி இருக்கிறார். அவரது தொடக்க கால உரைகளே சமூகநீதிக்கு அடித்தளம் அமைத்தன என்று திராவிடர் கழகத் துணைத்தலைவர் கவிஞர் கலி. பூங்குன்றன் அவர்கள் எழுதி இருக்கிறார்கள். இதே விக்டோரியா பப்ளிக் ஹாலில் 9.9.1934 அன்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் இயற்றிய "இரணியன் அல்லது இணையற்ற வீரன்" என்ற நாடகம் அரங்கேற்றம் செய்யப் பட்டது. தந்தை பெரியார் தலைமை வகித்துப் பாராட்டிப் பேசினார் என்றும் சொல்லி இருக்கிறார் அவர்.

வரலாற்று சிறப்புமிக்க, தொன்மை வாய்ந்த விக்டோரியா பொது அரங்கினை அதன் தொன்மை மாறாமல் புனரமைத்து, மறுசீரமைக்கும் பணியினை மேற்கொள்ள மாண்புமிகு முதலமைச்சர் உத்தரவிட்டார். பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 32.62 கோடி ரூபாய் செலவில் மறுசீரமைக்கும் பணி 20.03.2023 அன்று மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் தொடங்கி வைக்கப்பட்டது.

இத்தாலிய பாணி கோபுரத்தின் உச்சியில் திருவிதாங்கூர் கூரையுடன், செந்நிற சீன செராமிக் கற்களால் கட்டப்பட்ட மூன்றடுக்கு மன்றம் இது. **விக்டோரியா அரங்கம் மீண்டும் பரபரப்பான இடமாக மாறி உள்ளது. இசை நிகழ்ச்சிகள், நாடகங்கள், கவிதை வாசிப்பு, உரைகள் போன்ற நிகழ்வுகளை இங்கு நடத்தலாம். கட்டிடத்தின் முன்புறத்தில், ஒரு காலத்தில் சென்னையில் பரவலாக பயன்படுத்தப்பட்ட சைக்கிள் ரிக்ஷா, டிராம், படகுகள் ஆகியவற்றின் மாதிரிகள் அமைக்கப்பட்டுள்ளன. கீழடி அருங்காட்சியகம் நினைவூட்ட பட்டுள்ளது.**

**மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் அரசானது அரசியல், பொருளாதார, சமூக வளர்ச்சியை மட்டுமல்ல கலை வளர்ச்சிக்கும் முக்கியப் பங்காற்றி வருகிறது. பழமை மாறாமல் புதுப்பித்தல் என்பது அசல் வடிவமைப்பை மாற்றாமல் புதுப்பித்தல் ஆகும். இதற்காக தமிழ்நாடு அரசு நிதி உதவி வழங்கி வருவது கட்டடக் கலைக்குச் செய்யப் படும் சிறப்பு ஆகும். பழமை மாறாமல் புதுப்பிக்க 150 கோடி ரூபாயை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. திராவிட மாடல் அரசானது கட்டடக் கலையைப் போற்றும் அரசாகவும் செயல்பட்டு வருகிறது.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.12.2025) திருவண்ணாமலையில், வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் தொடக்க விழா மற்றும் திருவண்ணாமலை மாவட்ட அரசு விழாவில் கலந்து கொண்டுவிட்டு, சென்னை திரும்பும் வழியில், திருவண்ணமாலை மாவட்டம், கலசப்பாக்கத்தில் புதிதாக நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்தார். இந்நிகழ்வின்போது அமைச்சர் எ.வ.வேலு, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர் பெ.சு.தி.சரவணன் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.12.2025) திருவண்ணாமலையில் வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் தொடக்க விழா மற்றும் திருவண்ணாமலை மாவட்ட அரசு விழாவில் கலந்து கொண்டுவிட்டு, சென்னை திருப்பும் வழியில் திருவண்ணமாலை மாவட்டம், வந்தவாசியில் புதிதாக நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்தார். இந்நிகழ்வின்போது அமைச்சர் எ.வ.வேலு, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி.என். அண்ணாதுரை, தரணிவேந்தன். சட்டமன்ற உறுப்பினர் எஸ். அம்பேத்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## திருத்தணியில் அங்கன்வாடி கட்டிடத் திறப்பு!

திருத்தணி, டிச. 29-

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருத்தணி ஒன்றியம் அகூர் கிராமத்தில் 25.80 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு அங்கன்வாடி மையம் கட்டிடத்தை பயன்பாட்டிற்கு திருவள்ளூர் மேற்கு மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன், எம்.எல்.ஏ. திறந்து வைத்து, அங்கன்வாடி குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கினார்.

இதில் ஒன்றியச் செயலாளர் என்.கிருஷ்ணன், நிர்வாகிகள் அகூர் மாணிக்கம், ஐயப்பன், விஜய், மனோகரன், கோவேந்தன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## திருவண்ணாமலை மாநகரில்
# ரூ. 56.5. கோடி மதிப்பில் புதிய அரசு மாதிரி பள்ளிக் கட்டடம்!
## முதல்வர் மு.க,ஸ்டாலின் திறந்து வைத்து மாணவர்களுடன் கலந்துரையாடினார்!

**திருவண்ணாமலை, டிச.29-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.12.2025) திருவண்ணாமலை மாவட்ட அரசு விழாவில், பள்ளிக்கல்வித் துறை சார்பில் திருவண்ணாமலை மாநகரில் 56 கோடியே 47 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் புதிதாக கட்டப்பட்டுள்ள அரசு மாதிரி பள்ளிக் கட்டடம் மற்றும் மாணவ, மாணவியர்களுக்கான விடுதிகளை திறந்து வைத்தபின்னர், திருவண்ணாமலை மாநகர் அரசு மாதிரி பள்ளிக்கு நேரில் சென்று பார்வையிட்டு, மாணவ, மாணவியர்களுடன் கலந்துரையாடினார்.**

**அரசு மாதிரி பள்ளிகள்**

அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் கல்வி, நுண்கலை மற்றும் விளையாட்டுத் துறைகளில் சிறந்து விளங்குவதற்கான வாய்ப்பை வழங்கும் வகையிலும், அரசுப் பள்ளி மாணவர்கள் சிறந்த கல்வி நிறுவனங்களில் தொழில்முறை கல்வி பிரிவுகளில் (அறிவியல், தொழில் நுட்பம், பொறியியல், கலை மற்றும் மருத்துவம் - STEAM) சேர்ந்து பயிலும் வாய்ப்பினை உறுதி செய்யும் வகையிலும் மாதிரிப் பள்ளிகள் மாவட்டந்தோறும் உருவாக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

**திருவண்ணாமலை மாநகரில் திறந்து வைக்கப்பட்ட அரசு மாதிரி பள்ளிக் கட்டடம் மற்றும் விடுதிகள்**





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.12.2025) திருவண்ணாமலை மாவட்ட அரசு விழாவில், பள்ளிக்கல்வித் துறை சார்பில் திருவண்ணாமலை மாநகர் அரசு மாதிரி பள்ளிக்கு நேரில் சென்று பார்வையிட்ட போது, பத்தாம் வகுப்பு பயிலும் மாணவி ஸ்ரீநிஷா, நவம்பர் 27–30 வரை திரிபுரா மாநிலத்தில் நடைபெற்ற தேசிய செஸ் சாம்பியன் போட்டியில் மூன்றாம் இடம் பெற்றதற்காக வழங்கப்பட்ட பதக்கம் மற்றும் சான்றிதழை காண்பித்து வாழ்த்து பெற்றார்.

திருவண்ணாமலை மாநகர் அரசு மாதிரி பள்ளிக் கட்டடம் 4.52 ஏக்கர் பரப்பளவில் 19 கோடியே 33 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவிலும், மாணவர்கள் விடுதிக் கட்டடம் 18 கோடியே 57 இலட்சம் ரூபாய் செலவிலும், மாணவியர் விடுதிக் கட்டடம் 18 கோடியே 57 இலட்சம் ரூபாய் செலவிலும், என மொத்தம் 56 கோடியே 47 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளது.

இவ்விடுதிகள் 400 மாணவர்கள் மற்றும் 400 மாணவியர் தங்கும் வசதி கொண்டதாகும்.

**மாதிரி பள்ளி மற்றும் விடுதிக் கட்டடங்களின் முக்கிய அம்சங்கள்**

திருவண்ணாமலை மாநகர் அரசு மாதிரி பள்ளிக் கட்டடம், தரை மற்றும் இரண்டு தளங்களுடன் மொத்தம் 52,695 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது. இதில் 22 வகுப்பறைகள், பெண் மற்றும் ஆண் ஆசிரியர்கள் அறைகள், பல்நோக்கு மண்டபம், நூலகம், கலை மற்றும் கைவினைப் பயிற்சி அறை, மூன்று மாற்றுத் திறனாளிகள் கழிப்பறைகள், 60 கழிப்பறைகள், 6 கைக் கழுவும் தொட்டிகள், மாற்றுத் திறனாளிகளுக்கான சாய்தள வசதி (Ramp), வேதியியல், இயற்பியல் மற்றும் உயிரியல் ஆய்வகங்கள், 2 உயர் தொழில்நுட்பக் கணினி அறைகள் ஆகிய வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளன.

மாணவர் மற்றும் மாணவியர் விடுதிகள் : மாணவர் மற்றும் மாணவியர் விடுதிகள் தரை மற்றும் நான்கு தளங்களுடன் தலா 73,195 சதுர அடி பரப்பளவில் தனித்தனி கட்டடங்களாக கட்டப்பட்டுள்ளன.

இவ்விடுதிகள், மாணவர்களுக்கு 416 மற்றும் மாணவியர்களுக்கு 416 படுக்கைகள், என மொத்தம் 832 படுக்கை வசதிகளை கொண்டது. மேலும், பொது அறை / நூலகம், தலா 2 விடுதிக் காப்பாளர் அறைகள், தலா 2 மின்தூக்கிகள், சமையலறைகள், சமையல் பொருட்கள் சேமிப்பு அறைகள், தலா 200 நபர்கள் அமரும் கொள்ளளவு கொண்ட உணவுக் கூடம், கைக் கழுவும் பகுதிகள், எரிபொருள் அறைகள், தலா 65 கழிப்பறைகள், தலா 10 மாற்றுத் திறனாளிகள் கழிப்பறைகள், தலா 75 குளியலறைகள், தலா 2 குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள், 20 வெந்நீர் இயந்திரங்கள் (Water Heater 25 லிட்டர்), தலா 2 தரை நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள், ஆழ் துளை கிணறுகள், தீ அணைப்பான்கள் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் திருவண்ணாமலை மாநகர் அரசுப் பள்ளிக்கு நேரில் சென்று பார்வையிட்டு, அங்கு பயிலும் மாணவ, மாணவியர்களுடன் அவர்களுக்கு செய்து தரப்பட்டுள்ள வசதிகள் குறித்தும், அவர்களது தேவைகள் குறித்தும் கேட்டறிந்தார்.

அப்போது, பத்தாம் வகுப்பு பயிலும் மாணவி ஸ்ரீநிஷா, நவம்பர் 27 - 30 வரை திரிபுரா மாநிலத்தில் நடைபெற்ற தேசிய செஸ் சாம்பியன் போட்டியில் கலந்து கொண்டு மூன்றாம் இடம் பெற்றதற்காக வழங்கப்பட்ட பதக்கம் மற்றும் சான்றிதழை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் காண்பித்து வாழ்த்து பெற்றார்.

இந்நிகழ்வின்போது, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு, வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் க.தர்ப்பகராஜ், தமிழ்நாடு மாதிரி பள்ளிகள் உறுப்பினர் செயலர் ஆர். சுதன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.